கன்னியாகுமரி மாவட்டம் ஆளூர் பேரூராட்சி

ந. க. எண். 104 /2010 / அ1 நாள். 09.06.2010

## அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010 – 2011

## ஒப்புநோக்கு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு

1. கன்னியாகுமரி மாவட்டம் ஆளூர் பேரூராட்சியில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010 – 2011–ன் கீழ் அட்டவணையின்படி உள்ள பணிகளை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து பகிரங்கமாக பெற்றுக்கொள்ளப்படும். ஓப்பந்தக்காரர்கள் மத்திய அல்லது மாநில அரசு அல்லது மத்திய அரசு மாநில அரசு சார்ந்த நிறுவனங்களிலிருந்து பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும். மேலும் ஒப்பந்தக்காரர்கள் குறைந்தபட்ச தகுதியுடைய வகுப்பு 3 மற்றும் 4–ல் தெரிவிக்கப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டும் பணிகள் வழங்கப்படும் (15 இலட்சம் முதல் 30 இலட்சம் மதிப்பீடு வேலைகளுக்கு வகுப்பு 3–வது நிலையும் 15 இலட்சம் வரையுள்ள வேலைகளுக்கு வகுப்பு 4–வது நிலை ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்தங்கள் பெறப்படும்.
2. ஆளூர் பேரூராட்சியில் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு ஒப்பந்தக்காரர்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் வரவேற்கப்படுகின்றன.
3. பணிகளுக்குரிய ஒப்பந்த படிவங்களை 09.06.2010 முதல் 24.06.2010 வரை உள்ள வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் உரிய தொகையினை ஆளூர் பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி அல்லது செயல் அலுவலர் ஆளூர் பேரூராட்சி என்ற முகவரிக்கு வங்கி வரைவோலை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் படிவங்களை பதிவு தபால் மூலமாகவோ அல்லது விரைவு தபால் மூலமாகவோ பெற விரும்புவோர் உரிய தொகைக்கு மேல் கூடுதலாக ரூ. 200/– செலுத்த வேண்டும். தபால் வழி தாமதங்களுக்கு ஆளூர் பேரூராட்சி செயல் அலுவலர் பொறுப்பேற்க இயலாது.
4. ஒவ்வொரு பணிகளுக்கும் அதன் எதிரே குறிப்பிட்டுள்ள டேவணித் தொகையை ரொக்கமாகவோ அல்லது வரைவோலையாகவோ செயல் அலுவலர் ஆளூர் பேரூராட்சி என்ற முகவரிக்கு செலுத்தப்பட வேண்டும்.
5. ஒப்பந்தப்புள்ளிகளை ஆளூர் பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ 25.06.2010 வெள்ளிக்கிழமை 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஆளூர் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் வருகை தந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் அன்றைய தினம் 3.30 மணிக்கு திறக்கப்படும் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அன்றைய தினம் திறக்கப்படும்.
6. திட்டப்பணிகளுக்கான சம்மந்தப்பட்ட பணி ஆரம்பிக்கும் இடத்தில் தகவல் பலகை வைக்கப்பட வேண்டும். திட்டப்பணி ஆரம்பிப்பதற்கு முன், நடைபெறும் போது மற்றும் முடிவுற்றவுடன் ஆகிய மூன்று நிலைகளிலும் புகைப்படம் எடுத்து சமர்ப்பிக்க வேண்டும்.
7. இதர விவரங்களை ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (இலட்சத்தில்) | டேவணித் தொகை (ரூ) | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை (ரூ) | பணி முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | வெள்ளமண் ஓடை செல்லும் சாலை மேம்பாடு செய்து தார் வைத்தல். | **10.00** | 20000.00 | 3360.00 | இரண்டு மாதங்கள் |
| 2 | ஆளூர் பேரூராட்சி அலுவலகம் அருகில் சமுதாய நலக்கூடம் கட்டிடம் கட்டுதல். | **20.00** | 40000.00 | 3360.00 | மூன்று மாதங்கள் |
| 3 | அம்பேத்கார் காலனி பகுதியில் காங்கிரீட் தளம் அமைத்தல். | **5.00** | 10000.00 | 1680.00 | ஒரு மாதம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | கள்ளியங்காடு வட்டப்பாறையில் 60000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல். | **5.00** | 10000.00 | 1680.00 | மூன்று மாதங்கள் |
| 5 | சுங்கான்கடையில் 60000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல். | **5.00** | 10000.00 | 1680.00 | மூன்று மாதங்கள் |
| 6 | ஆளூர் பேரூராட்சி அலுவலகத்தில் முதல் மாடி கட்டிடம் கட்டுதல். | **10.00** | 20000.00 | 3360.00 | மூன்று மாதங்கள் |

**<u>சிறப்பு நிபந்தனைகள்</u>**

8. ஒப்பந்தப்புள்ளிகள் கொடுப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்கள் அவர்களின் பெயரில் கட்டாயமாக கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசு துறையில் 2005 – 2006 முதல் 2009 – 2010 வரை குறைந்த பட்சம் இரண்டு நிதி ஆண்டுகளில் வருடாந்திர நிதி செயல் திறன் தற்போது கேட்கப்படும் ஒப்பந்த புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு இரண்டரை மடங்கு அளவிற்கு கூடுதலாக கட்டுமான பொறியியல் பணிகள் செய்திருக்கப்பட வேண்டும்.
9. மேற்கண்ட பணிகளுக்கு தேவைப்படும் அனைத்து பொருள்களையும் ஒப்பந்தக்காரர்கள் தங்களது சொந்த பொறுப்பில் தரமானதாக வாங்கி பயன்படுத்தல் வேண்டும். அவ்வாறு வாங்கப்படும் பொருட்கள் தரம் மற்றும் அளவு நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். தரத்தைக் குறித்த தேவையான சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
10. ஒப்பந்தக்காரர்கள் கடந்த 5 ஆண்டுகளில் செய்து முடித்த பணி விவரங்களை ஆண்டு வாரியாக தாக்கல் செய்வதோடு ஏற்கனவே பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்படாமல் உள்ள விவரங்களை தாக்கல் செய்யப்பட வேண்டும்.
11. அமைக்கப்படும் பணிகள் ஒப்பந்தக்காரர்கள் பணியினை முடிக்கும் நாளிலிருந்து ஒரு வருடம் முடியும் வரையில் ஏற்படும் அனைத்து பராமரிப்பு பணிகளையும் தன் சொந்த செலவிலேயே மேற்கொள்ளுதல் வேண்டும். கூடுதல் வைப்புத் தொகை மேற்படி மதிப்பீட்டில் 5% செலுத்தப்பட வேண்டும்.
12. இதர விவரங்களை ஒப்பந்தப்புள்ளி நமுனாவில்லிருந்து தெரிந்து கொள்ளலாம் அல்லது அலுவலக நேரங்களில் பேரூராட்சி பொறியாளரின் ஆலோசனைகளைப் பெறலாம்.
13. ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு மன்ற ஒப்புதல் பெற்ற பின்னரே வேலை உத்தரவு ஆணை வழங்கப்படும்.
14. மேற்கண்ட பணிகள் நடைபெறும் போது சம்மந்தப்பட்ட உயர் அலுவலர்களால் ஆய்வு செய்யப்படும்.
15. பணிகள் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடிக்கப்பட வேண்டும் தவறும் பட்சம் அபராத தொகை விதிக்கப்படும்.

**செயல் அலுவலர்**
**ஆளூர் பேரூராட்சி.**

**பெறுநர்**

**ஆளூர் பேரூராட்சில் பதிவுபெற்ற**
**அனைத்து ஒப்பந்ததாரர்கள்**

**நகல் :-**

1. **இயக்குநர், பேரூராட்சிகள், குறளகம், சென்னை – 108 அவர்களின் தகவலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**
2. **உதவி இயக்குநர், பேரூராட்சிகள், நாகர்கோவில் அவர்களின் தகவலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**
3. **உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள், கன்னியாகுமரி மாவட்டம்**
4. **இளநிலை பொறியாளர், பேரூராட்சிகள், ஆசாரிபள்ளம் (இ)**
5. **பேரூராட்சி தலைவர், ஆளூர் பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்**
6. **ஆளூர் பேரூராட்சி விளம்பர பலகைகள்**
7. **குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து பேரூராட்சிகள் – விளம்பரம் செய்ய**

Visit as **http://townpanchayats.tn.gov.in/tender**